கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 107/2010**

திருமதி. புஷ்பவதி (P.W –1) **5.11.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 19 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 19 ஆம் பிரதிவாதியும் நானும் என்னுடைய தகப்பனாரின் வாரிசுகள் என்றால் சரி. இரண்டாம் வாதி என்னுடைய தாயார் என்றால் ஆமாம். தாவா பி பட்டியலிட்ட சொத்தாக 0.41 செண்ட் காண்பித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. பி பட்டியலிட்ட சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 139. கொண்டா கவுண்டரின் பெண் வாரிசுகள் தற்போது உயிருடன் இல்லை. பெண் வாரிசுகளின் வாரிசுதாரர்களை தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி. அவர்களுக்கு தாவா சொத்தில் பாகமே ஏற்படாது.

2. அவர்கள் என்னுடைய அப்பா உயிருடன் இருந்த சமயத்தில் இருந்து எங்களுடன் தொடர்பில் இல்லை. தாவா சொத்துக்கள் என்னுடைய அப்பாவின் பிதுராஜிய சொத்துக்கள் என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்த சமயத்தில் தாவா சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணம் ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா என்றால் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார்.

3. தாவா சொத்து என்னுடைய அப்பாவிற்கு கிரைய ஆவணத்தின்படி பொதுவாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி. அவருடைய வாரிசுகள் ஆறு பேருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது. அந்தச் சொத்தின் விஸ்தீரணம்

தெரியுமா என்றால் 0.41 சென்ட். அந்தச் சொத்தைப் பொறுத்து என்னுடைய தகப்பனார் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கின் 153/1970 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரி. அந்த வழக்கு 1972 ஆம் வருடம் தீர்ப்பு ஏற்பட்டு விட்டது.

4. அந்த வழக்கில் என்னுடைய தகப்பனாருக்கு 1.25 ஏக்கர் சொத்து தான் பாகம் என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் தவறு. ஐந்தில் ஒரு பங்கு என்று தீர்ப்பாகி உள்ளது. 0.41 சென்ட் என்னுடைய அப்பாவிற்கு பாத்தியப்பட்டு அவர் இறப்பிற்குப் பிறகு அவருடைய மனைவி மற்றும் அவருடைய மகளான எனக்கும் மற்றும் என்னுடைய சகோதரர் 19ம் பிரதிவாதிக்கும் சரி பாகம் உண்டு என்றால் சரிதான். ஆனால் என் அப்பா என் பெயரில் உயில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார். 0.41 சென்ட் நிலத்தில் 19 ஆம் பிரதிவாதியான என் சகோதரருக்கு மூனில் ஒரு பாகம் உள்ளது என்றால் தவறு. அந்த பகத்தை என் அப்பா உயில்மூலம் எனக்கு பத்தியப்படுத்தி கொடுத்து விட்டார். 19ம் பிரதிவாதிக்கும் 0.41 சென்டில் பாகம் ஒதுக்கி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் உயில் ஏற்படுத்தி உள்ளதாக சொல்வது பொய். அம்மாதிரி உயில் எதுவும் ஏற்படுத்தவில்லை. அது மோசடியானது என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.11.05 18:04:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.